மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மேட்டூர்.

| | | | |
|---|---|---|---|
| அ.வ.எண். | 191/2016 | சாட்சி | வா.சா.1 |
| பெயர் | மணி | நாள் | 18.06.2024 |
| தகப்பனார் பெயர் | சின்னண்ண கவுண்டர் | | |

**3, 4 பிரதிவாதிகள் தரப்பில் வா.சா.1 ஐ குறுக்கு விசாரணை:–**

1) இவ்வழக்கில் 3, 4 பிரதிவாதிகளிடம் என்ன பரிகாரம் கேட்டுள்ளேன் என்றால், சிவில் சப்ளை குடோனை வாடகைக்கு விட்டிருந்தனர். மேற்படி குடோனை அகற்ற வேண்டும் என பரிகாரம் கோரியுள்ளேன். தற்போது பிரச்சனைக்குரிய இடத்தில் குடோன் உள்ளதா என்றால், காலி செய்து விட்டனர். நானும், 1, 2 பிரதிவாதிகளும் வசித்து வரும் நிலங்கள் அரசாங்கத்தால் வீட்டுமனைக்கென அங்கீகரிக்கப்பட்ட இடம் என்றால், சரிதான்.

2) மேற்படி குடோன் அமைந்துள்ள பகுதியில் அவ்வாறு போக்குவரத்துக்குகென எவ்வளவு அடியில் சாலை அமைந்துள்ளது என்றால், என் வீட்டிற்கு வடபுறத்திலும், 1 ம் பிரதிவாதியின் வீட்டிற்கு தென் புறத்திலும் 20 அடி அகலத்தில் மேற்படி சாலை அமைந்துள்ளது. மேற்படி 20 அடி சாலை வாகன போக்குவரத்திற்காக ஒதுக்கப்பட்டது என்றாலும், தனி நபர்கள் யாரும் அதில் உரிமை கோர இயலாது என்றாலும், மேற்படி மனையில் வசிக்கும் நபர்கள் மட்டுமே தங்களது போக்குவரத்திற்காக மேற்படி சாலையை பயன்படுத்த இயலும்.

3) நான் சொல்வது தவறானது என்றால், சரியல்ல. மேற்படி வீட்டுமனை குடியிருப்பில் உள்ளவர்கள் மட்டுமே மேற்படி சாலையை பயன்படுத்துவதற்கு உரிமை உள்ளது என நான் சொல்வதற்கு ஆதாரமாக எவ்வித ஆவணங்களையும் தாக்கல் செய்யவில்லை என்றால், சரிதான். எனக்கும், 1, 2 பிரதிவாதிகளுக்கும் இடையேயுள்ள தனிப்பட்ட பிரச்சனை காரணமாக 3, 4 பிரதிவாதிகளை இவ்வழக்கில் தேவையற்ற தரப்பினர்களாக சேர்த்து வழக்காடி வருகிறேன் என்றால், சரியல்ல.

4) மேற்படி சிவில் சப்ளை குடோன் பொது மக்களுக்கு உணவு பொருட்கள் வழங்கும் நோக்கத்திற்காக அமைக்கப்பட்டது என்றால், சரியல்ல. அதில் வணிக நோக்கம் எதுவும் இல்லை என்றால், சரியல்ல. அவ்வாறு மேற்படி மனைபிரிவில் அமைந்துள்ள தடவழியை வேறு நபர்கள் எவரும் போக்குவரத்திற்கு பயன்படுத்த கூடாது என எவ்வித உத்தரவையும் நான் தாக்கல் செய்யவில்லை என்றால், சரியல்ல.

(3, 4 பிரதிவாதிகள் தரப்பில் கேட்டுக்கொண்டதற்கிணங்க வா.சா.1ன் குறுக்கு விசாரணை தொடர்ச்சி வேறு ஒரு தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது.)

-

ஒம்/−திரு. R.மணிவர்மன்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டுர்.